கணக்கு தொடர்பான குறிப்புகள்
டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான

உப ஆவணம் 15 — நிதி மற்றும் வங்கி நிலுவை

விபரங்கள்	பிரதான அலுவலகம்	கைத்தொழிற்சாலை	பசளை	உள்நாட்டு விற்பனை	வைத்திய நிதியம்	நலன்புரி	முகாமைத்துவ கைத்தொழிற்சாலை	மொத்தம்
கணக்கு இலக்கம் :2937124	1,533,476.84							1,533,476.84
கணக்கு இலக்கம் :2937157			27,529,354.42					27,529,354.42
வங்கியிலுள்ள நிதி		1,244,278.02						1,244,278.02
கணக்கு இலக்கம் :2937148					112,453.95			112,453.95
கணக்கு இலகக்ம் :2937165		155,359.00						155,359.00
கணக்கு இலக்கம் :2937162						18,034,580.88		18,034,580.88
கணக்கு இலக்கம் :2937163						46,790.57		46,790.57
கணக்கு இலக்கம் :2937155							875,864.48	875,864.48
முழு மொத்தம்	**1,533,476.84**	**1,399,637.02**	**27,529,354.42**	**0.00**	**112,453.95**	**18,081,371.45**	**875,864.48**	**49,532,158.16**

குறிப்பு : 2012 ஆண்டில் ரூபா 26.5 மில்லியன் பசளை கணக்கு நிலுவை ரூபா 25 மில்லியன் கட்டண வைப்பு நிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன

உப ஆவணம் 15 A — நிதி மற்றும் வங்கி நிறுவனம் - வங்கி பற்று

விபரங்கள்	பிரதான அலுவலகம்	கைத்தொழிற்சாலை	பசளை	உள்நாட்டு விற்பனை	ஏற்றுமதி	நலன்புரி	முகாமைத்துவ கைத்தொழிற்சாலை	மொத்தம்
கணக்கு இலக்கம் :2937158					1,112,680.89			1,112,680.89
கணக்கு இலக்கம் :2937161		72,747,923.77						72,747,923.77
கணக்கு இலக்கம் :2937164				810,291.55				810,291.55
கணக்கு இலக்கம் :2937023						9,700,079.37		9,700,079.37
முழு மொத்தம்	**0.00**	**72,747,923.77**	**0.00**	**810,291.55**	**1,112,680.89**	**9,700,079.37**	**0.00**	**84,370,975.58**

கணக்கு தொடர்பான குறிப்புகள்
டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான

உப ஆவணம் : 16 நடைமுறைக் கணக்கு

விபரங்கள்	பிரதான அலுவலகம்	கைத்தொழிற்சாலை	பசளை	உள்நாட்டு தேயிலை விற்பனை	நலன்புரி	முகாமைத்துவ கைத்தொழிற்சாலை	ஏற்றுமதி	மொத்த நிதி
பிரதான அலுவலகம்		(64,435,113.95)	(114,136,961.34)	(21,306,389.09)	21,427,662.94	(4,293,186.02)	(2,654,912.01)	**(185,398,899.47)**
கைத்தொழிற்சாலை	64,435,113.95		32,900,619.01	(1,053,940.00)		(9,356,350.18)		**86,925,442.78**
பசளை	114,136,961.36	(23,241,818.01)		(757,260.00)	29,373,244.93		(250,000.00)	**119,261,128.28**
உள்நாட்டு தே. விற்பனை	21,306,389.09	1,904,660.00	757,260.00		1,000,000.00		(17,847,133.87)	**7,121,175.22**
நலன்புரி	(21,427,662.94)		(29,373,244.93)				(472,056.00)	**(51,272,963.87)**
முகாமைத்துவ கைத்தொழிற்சாலை	4,293,186.02	9,358,350.18	190,000.00					**13,841,536.20**
ஏற்றுமதி	2,654,912.01	389,499.00	250,000.00	17,847,133.87	472,056.02			**21,613,600.90**
உப மொத்தம்	**185,398,899.49**	**(76,024,422.78)**	**(109,412,327.26)**	**(5,270,455.22)**	**52,272,963.89**	**(13,649,536.20)**	**(21,224,101.88)**	**12,091,020.04**
கைத்தொழிற்சாலைகளுக்கிடையிலான நடைமுறைக் கணக்கு நிலுவை								**834,376.19**
மொத்தம்								**12,925,396.23**

கணக்கு தொடர்பான குறிப்பு
டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான

உப ஆவணம் : 17 பங்கு மூலதனம்

அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம்	500,000,000.00
முழுமையாக செலுத்தப்பட்ட (காதாரண பங்கு	
வருட ஆரம்பத்தில் நிலுவை	197,984,666.00
ஆண்டுக்குள் கிடைப்பனவு (ஒப்பீடு)	10,974,464.00
ஆண்டின்	**208,959,130.00**

உப ஆவணம் : 18

	T.S.H.D.A. (கொடுப்பனவு)	
1998 ஆண்டிற்காக பெற்ற கொடுப்பனவு		26,690,873.44
1999 ஆண்டிற்காக பெற்ற கொடுப்பனவு		127,540,786.45
2000 ஆண்டிற்காக பெற்ற கொடுப்பனவு		69,540,270.33
2001ஆண்டிற்காக பெற்ற கொடுப்பனவு		185,000,000.00
2002 ஆண்டிற்காக பெற்ற கொடுப்பனவு		23,500,000.00
004 ஆண்டிற்காக பெற்ற கொடுப்பனவு		5,233,100.00
	மொத்தம்	**437,505,030.22**

உப ஆவணம் 19

	ஆண்டில் பங்களிப்பு	
2007/12/31 திகதியன்று நிலுவை		133,246,701.57
2007 ஆண்டில் பங்களிப்பு		219,191.01
2008 ஆண்டில் பங்களிப்பு		387,483.00
2009 ஆண்டில் பங்களிப்பு		499,000.00
2010 ஆண்டில் பங்களிப்பு		292,629.30
2011 ஆண்டில் பங்களிப்பு		230,960.00
2011.12.31 இறுதி நிலுவை		**134,875,964.88**

உப ஆவணம் : 20

	T.S.H.D.A.	
கைத்தொழிற்சாலை		58,001,047.37
பிரதான ஆலவலகம்-தே.சக்தி நிதியம்		2,151,761.41
உள்நாட்டு தேயிலை விற்பனை		4,206,269.39
நலன்புரி		9,689,463.13

கணக்கு தொடர்பான குறிப்புகள்

டிசம்பர் 31 ந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான

உப ஆவணம் : 21 கடன்படுனர் மற்றும் செலுத்தவேண்டியவை

விபரங்கள்	அலுவலகம்	கை.தொ.சா	பசளை	விற்பனை	நலன்புரி	கை.தொ.சா	ஏற்றுமதி	மொத்தம்
செலுத்தவேண்டிய கணக்கு		98,487,082.12	76,475.00	1,308,650.00		7,166,014.80		107,038,221.92
செலுத்தவேண்டிய கணக்கு - இலாபம்			1,951,480.00					1,951,480.00
கணக்காய்வு கட்டண ஒதுக்கீடு	450,000.00							450,000.00
களுத்துறை அலுவலக ந.மு.கணக்கு	189,147.00							189,147.00
தங்காலை அலுவலக ந.மு.கணக்கு	102,932.40							102,932.40
மாத்தறை அலுவலக ந.மு.கணக்கு	240,134.48							240,134.48
இரத்தினபுரி அலு.ந.மு.கணக்கு	249,040.94							249,040.94
கடன்படுனர்	40,000.00			14,053,378.06				14,093,378.06
வருமான வரி - செலுத்தவேண்டிய	27,963.14							27,963.14
முத்திரைக் கட்டணம்	871.83		2,001.00	152.00				3,024.83
வைத்திய நிதியம் -பிரதான அலுவலகம்	26,316.25							26,316.25
வைத்திய நிதியம்-கைத்தொழிற்சாலை	39,224.72							39,224.72
கைத்.தொ.சாலைக்கு செலுத்தவேண்டிய					500,000.00			500,000.00
வைப்பு	19,950.00		77,500.00					97,450.00
.கட்டணம்			50,000.00	30,609.00				80,609.00
கைவிடப்பட்ட வரி செலுத்தவேண்டிய			74,246.15					74,246.15
துறைசார்	2,060,709.05							2,060,709.05
பணிக்கொடை ஒதுக்கீடு	4,281,602.00							4,281,602.00
இலாப ஒதுக்கீடு							208,129.90	208,129.90
செலுத்த வேண்டிய காப்புறுதி					2,007,750.48			2,007,750.48
மொத்தம்	**7,727,891.81**	**98,487,082.12**	**2,231,702.15**	**15,392,789.06**	**2,507,750.48**	**7,166,014.80**	**208,129.90**	**133,884,027.69**

உப ஆவணம் 22 திரண்ட செலவினம் மற்றும்

விபரங்கள்	பிரதான அலுசலகம்	பசளை	கைத்தொழிற்சாலை	உள்நாட்டு விற்பனை	நலன்புரி	முகாமைத்துவ தொழிற்சாலை	தேயிலை ஏற்றுமதி	மொத்தம்
திரண்ட செலவினம்	71,883.90	69,205.18	106,528,212.60	9,200.00				கைத்தெ
மொத்தம்	71,883.90	69,205.18	106,528,212.60	9,200.00				106,678,501.68

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. எல்பீ/டீ/ரீஎஸ்எவ்/ஏப்ஏ/2011

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2013 யூன் 28

தலைவர்,
தேயிலை சக்தி நிதியம்

தேயிலை சக்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேயிலை சக்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2013 ஜனவரி 11 ஆந் திகதி நிதியத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපෑල / ஈ- மெயில் / E-mail oaggov@sltn

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

TEA SHAKTHI FUND
ADMINISTRATION DIVISION
26 SEP

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை சக்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2004 மற்றும் முன்னைய ஆண்டுகளில் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 437,505,030 ஆன மானியத்தை சரியாக இனங்கண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 ஆம் ஆண்டில் காலம் குறிப்பிடாது குத்தகையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கொத்மலை தொழிற்சாலை அமைந்துள்ள காணி, கட்டிடம் மற்றும் அற்குரிய சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி செயற்பாட்டுக் குத்தகை அல்லது நிதிக் குத்தகை என்ற வகையில் சரியாக இனங்காணாது ரூபா 15,354,796 இற்கு மதிப்பிடப்பட்டு நிலையான சொத்தாகவும் குத்தகைதாரர் நிதியத்தின் பொறுப்பாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. மேலும் ஆண்டிற்குரிய குத்தகை தவணைப்பணம் குத்தகைதாரர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் சொத்துக்களிற்குரிய பெறுமானத்தேய்வு இலாபநட்டக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் முறையான குத்தகை உடன்படிக்கையொன்றில் இரு தரப்பும் கைச்சாத்திட்டிருந்தமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்புகளின் 2.2.4(எச்) பந்தியின் படி சொத்துக்கள் பயன்பாட்டிற்குத் தயாரான சந்தர்ப்பம் முதல் பெறுமானத்தேய்வினைக் கணிப்பிடுதல் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அப்பந்தியிலேயே சொத்து கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்விடுவதில்லை என்பது கணக்கீட்டுக் கொள்கையாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் கணக்கீட்டுக் கொள்கையில் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுகளில் தேயிலை புரள்விற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய பொருளாதாரச் சேவைக் கட்டணம் குறித்த காலப்பகுதிக்கான மொத்த தேயிலை புரள்வில் 0.25% ஆக காணப்பட்ட போதிலும் நிதியத்தினால் 0.5% என தவறுதலாகக் கணிப்பிட்டு செலுத்தியிருந்தமையால் ரூபா 9.839 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2.167 மில்லியன் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய தொகையிலிருந்து கழிக்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 7.671 மில்லியன் தொகை பெறப்பட வேண்டியதாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டு அல்லது குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒருங்கிணைந்த தொழிற்சாலை ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்கையில் சரியான கணக்கு வைத்தல் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

தொழிற்சாலை	விடயம்	பெறுமதி	இறுதிக் கணக்குகளில் காட்டப் பட்டுள்ள விதம்
		ரூபா	
பசறை	முன்னைய ஆண்டுச் சீராக்கம்	71,361	இலாப நட்டக் கணக்கிற்குப் பதிலாக கடன்பட்டோர் கணக்கு

பலங்கொட, மஹவலி, கெப்பட்டிபொல	பல்லின வருமானம்	2,200,271	இலாப நட்டக் கணக்கிற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கு
கொத்மலை	பல்லின வருமானம்	442,275	இலாப நட்டக் கணக்கிற்குப் பதிலாக கடன்பட்டோர் கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.
கிளிமலே, ஹினுதும	நடைமுறைக் கணக்கு	1,835,110	கடன்கொடுத்தோர் கணக்கிற்குப் பதிலாக கடன்பட்டோர் கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.
கொத்மலை	கொழுந்து பசளை	11,484	செலுத்த வேண்டிய கணக்கின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக கடன்பட்டோர் கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.
	ஸ்ரீ லங்கா ரெலிகொம்	14,765	பெறப்பட வேண்டிய கணக்கின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.
	பசளை செயற்பாட்டு நட்டம்	12,128	இலாப நட்டக் கணக்கிற்குப் பதிலாக கடன்பட்டோர் கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது
	கடன்பட்டோர்	20,004	கடன்பட்டோர் கணக்கிற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டுக்குரிய உள்நாட்டு தேயிலைப் பிரிவின் செலுத்தப்படாத பங்கிலாபமாக மீளாய்வாண்டின் வருமானத்திற்கு ரூபா 1,567,193 சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது முன்னைய ஆண்டின் முன்கொண்டு வரப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தலாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. அதனால் அதற்குரிய வரவுப் பதிவினை கணக்கீடு செய்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்காதிருந்ததுடன் உள்நாட்டு தேயிலைப் பிரிவின் கணக்குகளில் மாத்திரம் இத்தொகை கடன்கொடுத்தோரிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பசறை தொழிற்சாலையின் ரூபா 930,467 ஆன திரட்டிய தேய்வப் பெறுமதிகளுக்குரிய சொத்துக்களின் கிரயம் அதற்குரிய பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2006 யூன் மாதத்திற்கு முன்னர் தேய்வாக முடிவடைந்த தேயிலை கிலோ ஒன்றிற்காக ரூபா 3 தேய்வேற்பாடும், 2006 யூன் மாதத்தின் பின்னர் நிலையான சொத்துக்களின் பெறுமதியின் சதவீதமொன்றாக

பெறுமானத்தேய்வும் செய்யப்பட்டதன் காரணமாக திரண்ட மீதியாக காட்டப்பட்டிருந்த போதிலும், அத்தேய்வு எந்தச் சொத்திற்காக செய்யப்பட்டது என்பதனை உறுதியாக காண்பிக்க முடியாதுள்ளதாக இது தொடர்பில் தலைவரின் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) நலனோம்பல் பிரிவினால் பேணிவரப்படும் வங்கிக் கணக்கொன்று தொடர்பில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட காலமாக நிலவிவரும் கணக்கிணக்கம் செய்யப்படாத மீதியாக இனங்காணப்பட்ட ரூபா 1,067,955 தொகை முறையான அங்கீகாரமின்றி காசுப் புத்தகத்திலிருந்து அகற்றப்பட்டு 2011 ஆம் அண்டிற்கான ஏனைய செலவுகளிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2011 திசெம்பர் 31 இற்கு வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தலின் படி ரூபா 56,560 மீதியொன்று காணப்பட்ட வங்கிக் கணக்கொன்று மீளாய்வாண்டின் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி தெரணியகல தொழிற்சாலைக் கணக்குகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாக ரூபா 20,069,352 காட்டப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் தெரணியகல தொழிற்சாலைக்காக ரூபா 8,404,553 தலைமை அலுவலகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் மேற்படி கணக்கின் மீதி ரூபா 28,473,905 ஆக காணப்பட வேண்டிய போதிலும் தொழிற்சாலை இறுதிக் கணக்குகளில் அது ரூபா 29,048,877 எனக் காட்டப்பட்டமையால் ரூபா 574,972 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் ரூபா 574,972 ஆன செலவினம் 2011 ஆம் ஆண்டின் செலவினத்திற்கு சேர்க்கப்பட்டமையால் இவ்வேறுபாடு ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நலனோம்பல் பிரிவிற்குரிய வங்கிக் கணக்கின் மீதி ரூபா 18,034,581 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 இற்கு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காசுப் புத்தக மீதி ரூபா 1,992,218 ஆக காணப்பட்டமையால் ரூபா 16,042,363 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு தேயிலை விற்பனைப் பிரிவின் பின்வரும் கணக்குகளில் ஆரம் மீதிகளில் ரூபா 36,555,735 கணக்கிணங்காமை அவதானிக்கப்பட்டது.

விபரம்	2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	வேறுபாடு
	ரூபா	ரூபா	ரூபா
நிலையான வைப்புக்கள்	652,525	400,000	252,525
கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்தவேண்டிய மீதி	14,084,139	14,890,023	805,884
தலைமை அலுவலகம்	3,656,197	21,306,389	17,650,192
தேயிலை ஏற்றுமதி பிரிவு		17,847,134	17,847,134
மொத்தம்			36,555,735

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் வங்கி மீதி உறுதிப்படுத்தலின் படி நிலையான வைப்புக்கள் 09 இன் பெறுமதி ரூபா 102,805,691 ஆக காணப்படினும், இறுதிக் கணக்குகளின் படி அது ரூபா 103,174,789 ஆக இருந்தமையால் நிலையான வைப்புக்களில் ரூபா 369,098 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 12,925,396 பெறுமதியான இனங்காணப்படாத நாடளாவிய நடைமுறைக் கணக்கு மீதியை தீர்வுசெய்யாது நீண்ட காலமாக அது நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டில் "இரஷ்ய இலங்கை கூட்டு உடன்படிக்கை" இன் கீழ் இரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை இருப்பிற்காக பெறவேண்டிய

ரூபா 19.9 மில்லியன் மற்றும் 14 தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளிற்கு கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேயிலை விற்பனைகள் தொடர்பில் பெறப்பட வேண்டிய ரூபா 21 மில்லியன் ஆகியவற்றை அறவிடாது அதற்காக அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாடாக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(இ) தொழிற்சாலை நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 2001 முதல் 2004 ஆம் காலப்பகுதியில் 4 தனியார் தரப்பினர்களிற்கு கூட்டுமொத்தம் ரூபா 33,154,952 முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த நிர்மாணங்களை பூர்த்திசெய்து கொள்வதற்கோ அல்லது அந்த முற்பணங்களை தீர்த்துக் கொள்வதற்கோ கணக்காய்வுத் திகதியான 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பு தேயிலைத் தரகர்கள் சங்கத்தின் 59/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 28 மற்றும் 29(அ) பந்திகளின் பிரகாரம் தரகர்களிற்கு விற்பனை செய்யப்படுகின்ற தேயிலைகளிற்காக 7 நாட்களிற்குள் குறித்த தொகையினை அறவிட்டுக்கொள்ள வேண்டியிருப்பினும், 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிற்காக தேயிலை தரகர் சங்கமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,744,732 தொகை மீளாய்வாண்டின் போதும் நிலுவை மீதியாக காணப்பட்டது. இத்தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக தற்போது கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நிதியத்தின் தலைவரினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள முறையே ரூபா 25,429,463 மற்றும் ரூபா 15,092,477 ஆன மீதிகள் தீர்க்கப்படாது நீண்ட காலமாக கணக்குகளிற்கு முன்னெடுத்து வரப்பட்டிருந்தன. இவற்றிற்காக வயதுப் பகுப்பாய்வும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதியத்திற்காக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையால் செலவிடப்பட்ட ரூபா 74,048,541 ஆன செலவினம் நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் செலுத்தவேண்டிய செலவினமாக மாற்றமின்றி காணப்பட்டது.

(எ) எல்பிடிய தொழிற்சாலையில் பல வருடங்களாக முன்னெடுத்து வரப்படுகின்ற ரூபா 403,524 டீசல் பற்றாக்குறையினை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலேனும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கு எதிரேயும் காட்டப்பட்டுள்ள பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்று
	ரூபா	
(அ) வங்கி நேரடி செலவு வைத்தல்கள்		
பசளைகள் பிரிவு – 2009 மற்றும் அதற்கு முன்னர்	5,481,546	நேரடி செலவு வைத்தல் தொடர்பான தகவல்கள்
-- 2010	1,799,021	
(ஆ) உள்நாட்டு தேயிலைப் பிரிவு		
– கடன்பட்டோர்	4,639,991	மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் பட்டோலைகள்
-- கடன்கொடுத்தோர்	14,053,378	
(இ) திறைசேரி உண்டியல்களிற்கான வட்டி வருமானம்	6,469,656	2010 ஆம் ஆண்டின் வட்டி வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட நாட்குறிப்புப் பதிவிற்கான விளம்பல்கள்
(ஈ) நிலையான சொத்துக்கள்	450,650,809	நிலையான சொத்துக்கள் பதிவேடு

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு	நிதியத்தின் ஆண்டறிக்கை 2005 ஆம் ஆண்டின் பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

SHAKTHI FUND ... 26 SEP ... DIVISION

(ஆ)	அரசாங் நிதிப்பிரமாணம் நி.பி. 396	ரைகம் கோரலை, தெனியாய, மஹவெலி மற்றும் கொத்மலை தொழிற்சாலைகளிற்குரிய வங்கிக் கணக்குகளில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காலம் கடந்த ரூபா 148,188 பெறுமதியான 19 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.
(இ)	2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 6:5:1 ஆம் பந்தி	2011 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை 2012 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரைக்கும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான ஒட்டுமொத்த நிதி விளைவுகள் ரூபா 84.402 மில்லியன் தேறிய நட்டமொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டில் ரூபா 28.520 மில்லியன் தேறிய நட்டமொன்றானமையால் நிதி விளைவுகளில் ரூபா 55.882 மில்லியன் பின்னடைவொன்றைக் காட்டியது. மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 36.452 மில்லியனால் குறைவடைந்தமை, நிர்வாக மற்றும் நிதிச் செலவினம் ரூபா 27.77 மில்லியனால் அதிகரித்திருந்தமை போன்றன தேறிய நட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன. மேலும் நிதியத்திற்கு உரித்தற்ற குத்தகையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்களை 2006 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்திருந்தமை காரணமாக எழுந்திருந்த மூலதன நட்டம் ரூபா 10.43 மில்லியன் மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தமையும் நிதி விளைவுகளில் பின்னடைவிற்கு காரணமாகியிருந்தன.

DIVISION

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2008 – 2012 வரையான காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்தின் படி 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஆண்டிற்கு தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் தேறிய இலாபத்தினை ரூபா 150 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்வதற்கும் உள்நாட்டு தேயிலைப் பிரிவிலிருந்து கிடைக்கும் தேறிய இலாபத்தினை ரூபா 5 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்வதற்கும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் தொழிற்சாலைகளின் நட்டம் ரூபா 73.6 மில்லியனாகவும் உள்நாட்டு தேயிலைப் பிரிவின் நட்டம் ரூபா 0.91 மில்லியனாகவும் காணப்பட்டமையால் அவ்விலக்கினை அணுகுவதற்கு நிதியத்தினால் முடியாது போயிருந்தது.

(அ) தொழிற்சாலைப் பரிவு

தொழிற்சாலைகளின் நிதி விளைவுகள்

நிதியத்தின் தொழிற்சாலைகளின் நட்டங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 39.230 மில்லியன் பெறுமதியால் அல்லது 114% இனால் அதிகரித்திருந்தது. 2011 ஆம் ஆண்டிற்கான மொத்த விற்பனை வருமானம் ரூபா 169.625 மில்லியனால் அல்லது 18% இனால் குறைவடைந்திருந்தமை, உற்பத்திக் கிரயம் ரூபா 167.338 மில்லியனால் அல்லது 17% இனால் குறைவடைந்திருந்தமை, தொழிற்சாலை செயற்பாட்டுச் செலவினம் ரூபா 14.091 மில்லியனால் அதிகரித்திருந்தமை என்பன இந்த நட்டத்தின் அதிகரிப்பிற்கு பிரதான காரணிகளாக அமைந்திருந்தன. 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒவ்வொரு தொழிற்சாலையினதும் இலாப நட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

இலாப நட்ட நிலை

தொழிற்சாலை	2011	2010	2009	2008	2007
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
தெனியாய	(4,126)	1,054	7,913	6,709	18,563

வலகந்துவ	(3,312)	558	1,436	1,940	13,107
மாவரல	(3,653)	158	(801)	(1,946)	3,191
எல்பிடிய	(16,604)	(10,105)	(8,994)	(13,298)	1,991
ஹினிதும	(14,712)	(13,223)	(6,636)	(10,015)	(627)
பலங்கொடை	(10,316)	(3,821)	(8,157)	(4,813)	(1,235)
கிளிமலை	(3,593)	(3,148)	(3,671)	(8,645)	(3,635)
பன்சல்தென்ன	(7,943)	(7,010)	(5,725)	(11,015)	(3,513)
ரைகம் கோரலை	2,191	7,670	16,977	10,712	18,667
கொத்மலை	(8,901)	(11,348)	(6,120)	(7,430)	(513)
கெப்பிட்டிபொல	(5,223)	1,239	10,046	(4,199)	4,584
பசறை	2,345	6,342	17,162	(1,032)	10,655
மஹவலி	245	(2,738)	2,345	3,265	16,805
மொத்தம்	(73,602)	(34,372)	15,775	(39,767)	78,040

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிதியத்தின் மேற்குறித்த 13 தொழிற்சாலைகளில் 5 தொழிற்சாலைகள் 2007 முதல் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் நட்டத்தினை ஈட்டியிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 தொழிற்சாலைகளைத் தவிர்த்து எஞ்சிய சகல தொழிற்சாலைகளிலும் நட்டத்தினை ஈட்டியிருந்தன.

(ii) தற்போது கிளிமலை மற்றும் பன்சல்கென்ன தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதுடன் கினிதும தேயிலைத் தொழிற்சாலை இலாபத்தில் 1/3 பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் (முதல் 03 மாதங்கள் நீங்கலாக) தேயிலை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கருமங்களை

DIVISION

மேற்கொள்வதற்காக 2012 மே முதல் களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) கிளிமலை தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தொழிற்சாலையின் பேணல் நடவடிக்கைகளிற்கான இயந்திரத் தேய்வு அடங்கலாக 2010 மற்றும் மீளாய்வாண்டில் முறையே ரூபா 3.148 மில்லியன் மற்றும் ரூபா 3.593 மில்லியன் என்ற வகையில் ரூபா 6.741 மில்லியன் செலவினமாக இலாபத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. தற்போது அத்தொழிற்சாலை குத்தகை அடிப்படையின் கீழ் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர் ஒருவரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(iv) 1313 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தின் படி பன்சல்தென்ன தேயிலைத் தொழிற்சாலையினை மூடிவிடுவதற்கும் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து குத்தகையின் கீழ் பெற்றுக்கொண்டிருந்த காணி கட்டிடங்களை மீள ஒப்படைப்பதற்கும் தொழிற்சாலையிலிருந்த நிதியத்திற்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களை தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் யடிநுவர தொழிற்சாலையில் பொருத்துவதற்கும் அங்கு சேவையாற்றிய ஊழியர்களிற்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 23.88 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் யடிநுவர தொழிற்சாலையில் பொருத்தப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி 01 முதல் 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரைக்கும் அந்த இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்நாட்டு தேயிலைப் பிரிவு

உள்நாட்டு தேயிலைப் பிரிவில் போதிய எண்ணிக்கையான பதவியணியினருடன் கூடிய சந்தைப்படுத்தல் இயந்திரமொன்று காணப்படாமையால் அப்பிரிவு 2006 ஆம் ஆண்டு முதல் நட்டத்தினை ஈட்டி வருகின்றது. 2011 ஆம் ஆண்டில் ரூபா 0.91 மில்லியன் நட்டத்தினை ஈட்டியிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 0.7 மில்லியன் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. உள்நாட்டு தேயிலைப் பிரிவு ஆரம்பம் முதல் ஈட்டியிருந்த திரண்ட நட்டத் தொகை ரூபா 18.18 மில்லியனாகும்.

(இ) பசளைகள் பிரிவு

பசளைகள் பிரிவின் இலாப நட்டக் கணக்கின் படி மீளாய்வாண்டில் ரூபா 19.64 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டிருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டில் ரூபா 4.66 நட்டம் ஈட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 14.98 மில்லியன் வளர்ச்சியைக் காண்பித்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பன ரூபா 12.08 மில்லியனால் அதிகரித்தும் 2007 ஆம் ஆண்டில் பங்கிலாபமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 8.00 மில்லியனை மீள வருமானத்திற்கு எடுத்துக் கொண்டிருந்தமையாலும் ரூபா 19.64 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டிருப்பினும் பசளைகள் பிரிவு மீளாய்வாண்டில ரூபா 0.44 மில்லியன் தொகையான செயற்பாட்டு நட்டத்தினை ஈட்டியிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேயிலை உற்பத்தி

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் படி ஒவ்வொரு தொழிற்சாலைகளினதும் தேயிலை உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

தொழிற்சாலை	2011	2010	2009	2008	2007
	கிலோ கிராம்	கிலோ கிராம்	கிலோ கிராம்	கிலோ கிராம்	கிலோ கிராம்
மெதனியாய	269,655	310,725	320,422	362,019	443,352
வலகந்துவ	260,930	257,830	215,419	328,902	430,060

மாவரல	171,257	175,756	135,765	170,915	214,070
எல்பிடிய	148,022	178,077	178,521	305,722	359,728
ஹினிதும	106,607	197,829	86,080	117,190	260,679
பலங்கொடை	74,290	189,991	30,799	236,181	218,398
கிளிமலை	-	-	253	103,656	136,132
பன்சல்தென்ன	104,900	89,478	89,759	237,718	162,080
ரைகம் கோரலை	400,380	348,710	373,228	415,690	435,393
கொத்மலை	200,027	103,042	170,888	306,975	299,764
கெப்பிட்டிபொல	243,507	273,322	266,069	335,648	328,202
பசறை	307,929	328,441	364,673	417,012	430,267
மஹவலி	458,806	301,755	381,466	749,879	761,754
மொத்தம்	2,745,710	2,754,956	2,613,342	4,087,507	4,479,879

2007 ஆம் 2008 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் சகல தொழிற்சாலைகளிலும் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12 தொழிற்சாலைகளில் 7 தொழிற்சாலைகளின் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தது.

(ii) கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வருடந்தோறும் அடையப்பட வேண்டிய இலக்கின் பால் தொழிற்சாலைகளை இயக்கிச் செல்வதற்கு நிறுவனம் தவறியிருந்ததுடன் 2011 இற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தினை செயலாற்றல் அறிக்கையுடன் ஒப்பிடுகையில் உள்ளபடியான உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் எதிர்பார்த்த அளவினைக் காட்டிலும் குறைவாகக் காணப்பட்டது. தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலை	செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அடையப்பட வேண்டிய இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி	செயலாற்றல் அறிக்கையின் படி உள்ளபடியான தேயிலை உற்பத்தி	முரணின் அளவு
	கி.கி	கி.கி	%
தெனியாய	417,115	269,055	(35.5)
வலகந்துவ	390,000	260,930	(33.1)
எல்பிடிய	365,600	148,021	(59.5)
ஹினிதும	301,000	106,607	(64.6)
பலங்கொடை	289,900	74,291	(74.4)
கிளிமலை	140,100	-	-
பன்சல்தென்ன	202,370	104,899	(48.2)
கொத்மலை	301,000	200,027	(33.5)

(iii) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி மீளாய்வாண்டில் நிதியத்தின் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களின் இயலளவு உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

தொழிற்சாலை	இயந்திர இயலளவு	இயந்திரப் பயன்பாடு	குறைப் பயன்பாடு
	கி.கி	கி.கி	கி.கி
தெனியாய	2,352,000	1,310,992	1,041,008
வலகந்துவ	4,536,000	1,264,173	3,271,827

எல்பிடிய	3,696,000	724,613	2,971,387
கெப்பிடிபொல	3,360,000	1,137,382	2,222,618
ரைகம்கோரலை	3,696,000	1,891,541	1,804,459
கொத்மலை	2,252,000	905,483	1,346,517
மஹவலி	4,032,000	2,103,202	1,928,798
மாவரல	2,688,000	827,292	1,860,708
பசறை	2,016,000	1,405,534	610,466

(ஆ) நலனோம்பல் பிரிவு

மீளாய்வாண்டிற்கான காப்புறுதித் தவணைப் பணமாக ரூபா 14.122 மில்லியன் காப்புறுதி நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 839 நலனாளிகளிற்கு ரூபா 15.656 மில்லியன் பிரதிநலன்கள் வழங்கப்பட்டிருந்தன. 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி காப்புறுதி நலத் திட்டம் 140,402 அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்ததுடன் மீளாய்வாண்டில் 93 புதிய அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 230,960 அங்கத்துவப் பங்களிப்பு கிடைத்திருந்தது.

4.2 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டு முதல் நிர்மாணம் தொடங்கப்பட்ட 5 தொழிற்சாலைகளின் கட்டிட நிர்மாணிப்பு வேலைகளிற்காக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 31.297 மில்லியன் தொகை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நிர்மாணங்களில் ஒரு தொழிற்சாலை மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய தொழிற்சாலைகளின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அந்த நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக்கான ரூபா 31.297 மில்லியனிற்கு உரித்தான செலவின விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நிதியத்தின் தலைமை அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 50 ஆண்டு குத்தகை அடிப்படையின் கீழ் ரூபா 28 மில்லியன் பெறுமதியுடைய 40 பேர்சஸ் காணிக்கு 2010 மார்ச் 31 இல் ரூபா 8,082,256 தவணைப்பணம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை குறித்த கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 971,532 பெறுமதி கொண்ட பொலிதின் இருப்பு 2007 ஆம் ஆண்டு முதல் 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை உள்நாட்டு தேயிலை விற்பனைப் பிரிவின் களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்ததுடன் இப்பொலிதின் இருப்பினை உள்ளகப் பதவியணியினரின் தேயிலை உதவி மானியம் வழங்குவதற்குப் பயன்படுத்துவதாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தலைமை அலுவலகத்தினதும் எல்லாத் தொழிற்சாலைகளினதும் ஒன்றித்த நிதியக் கணக்கினைத் தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் ரூபா 2,278,360 பெறுமதியான கணனி மென்பாக கணக்கீட்டு முறைமைக்காக மொத்தப் பெறுமதியில் 70% ஆகிய ரூபா 1,548,400 தொகை 2010 ஆம் ஆண்டிலும் 20% ஆகிய ரூபா 442,175 தொகை மீளாய்வாண்டிலும் செலுத்தப்பட்டிருப்பினும், அக் கணனி மென்பாக கணக்கீட்டு முறைமையினை உபயோகித்து தலைமை அலுவலகம் மற்றும் தொழிற்சாலைகளுடன் ஒன்றித்த கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை முடியாது போயிருந்தது.

4.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 பெப்ரவரி 24 முதல் யூலை 10 ஆந் திகதி வரையான காலத்தில் கொத்மலை தேயிலை தொழிற்சாலையில் ரூபா 1,221,950 பண மோசடியொன்று இடம்பெற்றிருந்ததுடன் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மரணித்துள்ளதால் அத்தொகையினை நிதியத்திற்கு அறவிட்டுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) உள்நாட்டு தேயிலை விற்பனைப் பிரிவிற்குச் சொந்தமான காலம் கடந்த ரூபா 510,027 பெறுமதியான முடிவடைந்த தேயிலை இருப்பு 2008 முதல் இறுதி இருப்புக்குள் உள்ளடக்கியிருந்தது.

4.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காசும் வங்கியும்

(i) வங்கி மேலதிகப்பற்று மீதியை பேணிவருதல்

2011 திசெம்பர் 31 இல் நிதியத்தினால் ரூபா 72,747,923 வங்கி மேலதிகப்பற்று வசதி பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக ஆண்டின் போது மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 4,322,462 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தினால் பேணப்பட்டு வருகின்ற 03 வங்கிக் கணக்குகளின் காசுப் புத்தகத்தின் படி கூட்டுமொத்தம் ரூபா 11,623,051 மேலதிகப்பற்று மீதி நீண்ட காலமாக நிலவி வருவதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 306,238 சாதக மீதியாகும் என வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த வங்கி மீதிகள் தொடர்பில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காமை

மேற்குறிப்பிட்ட மேலதிகப்பற்று மீதிகளுடன் கூடிய மூன்று வங்கிக் கணக்குகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்ககளிற்காக கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

வங்கிக் கணக்கு	2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்தக மீதி	வங்கி மீதி உறுதிப்படுத்தலின் படி மீதி
	ரூபா	ரூபா
நலனோம்பல் பிரிவு	112,454	112,454
- மேற்படி -	46,791	46,791
தொழிற்சாலை முகாமைத்துவப் பிரிவு	875,864	மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படவில்லை

தெனியாய – பசளை கணக்கு	11,418	- மேற்படி -
கிளிமலை – தொழிற்சாலை கணக்கு	46,768	- மேற்படி -
ரைகம்கோரலை	1,000	32,232

(iii) செயற்படாத வங்கிக் கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குச் சொந்தமான 08 வங்கிக் கணக்குகள் செயற்படாது காணப்பட்டன. ரூபா 155,359 பெறுமதியான மீதியினைக் கொண்ட வங்கிக் கணக்கொன்று 2009 ஆம் ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்டதுடன் ரூபா 10,425 பெறுமதியான வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலையாக அந்த வங்கிக் கணக்கிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான சொத்துக்கள்

வலகந்துவ தொழிற்சாலைக் கணக்குகளில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடக் கிரயமாக ரூபா 10,422,335 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருப்பினும், அக்கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்தினை கணக்காய்வுத் திகதி வரைக்கும் நிதியத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 28,440 செலவிடப்பட்டிருந்தது.

4.5 மனித வள முகாமைத்துவம்

2011 யூலை 05 ஆந் திகதிய DMS/B/02/P1/16 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் படி நிதியத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 90 ஆக காணப்பட்டது. 13 தேயிலைத் தொழிற்சாலைகளிற்கான பதவியணியினர் 199 (புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி) என குறிப்பிடப்பட்டிருப்பினும் அப்பதவியணி 2011 யூலை 05 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

ஊழியர் வகை	அங்கீகரித்த எண்ணிக்கை	உள்ளபடியான எண்ணிக்கை	வெற்றிட எண்ணிக்கை
சிரேஷ்ட	03	02	01
இரண்டாம் மட்ட	27	10	17
மூன்றாம் மட்ட	48	28	20
சிற்றூழியர்	12	07	05
மொத்தம்	90	47	43

இதற்கு மேலாக சிரேஸ்ட பதவியொன்றிற்கும் இரண்டு இரண்டாம் மட்ட பதவிகளிற்கும் 09 மூன்றாம் மட்ட பதவிகளிற்கும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது.

தொழிற்சாலை பதவியணியினர் (புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி)

ஊழியர் வகை	அங்கீரித்த எண்ணிக்கை	உள்ளபடியான எண்ணிக்கை	வெற்றிட எண்ணிக்கை
பதவிநிலைத்தரமற்ற	127	64	63
சிற்றூழியர்	72	15	57
மொத்தம்	199	79	120

4.6 வாகனப் பயன்பாடு

13 வாகனங்கள் மற்றும் 21 லொறிகளின் அணியொன்று நிதியத்திற்கு உரித்தாக காணப்பட்டதுடன் நிதியத்தின் 07 தொழிற்சாலைகளிற்கு லொறிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 6,443,977 ஆன தொகை 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரைக்கும் தீர்க்கப்படாதிருந்தமையால் லொறிகளின் உரிமை சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையால் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி, நிலவும் சட்டங்களிற்கு முரணாக வருமான அனுமதிப்பத்திரமேனுமின்றி இந்த லொறிகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

DIVISION

5. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி

TEA SHAKTHI FUND
26 SEP 2013
ION DIVISION

கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்தல்

அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீ.ஈ.டீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5:1:2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய நிலவும் வளங்கள், ஒழுங்கமைப்பு வரைபடம், மீளாய்வாண்டுக் காலப்பகுதிக்கான தந்துரோபாய திட்டங்கள், திட்டமிட்ட காலப்பகுதியில் அடையப்படவுள்ள நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக குறிப்பிட்டு அந்தந்த முகாமையாளர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களுடன் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் குறிகாட்டிகள் போன்ற பிரதான விடயங்களை 2008-2012 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் கொண்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தினை வருடந்தோறும் மீளாய்வு செய்தல்

மேற்படி சுற்றறிக்கையின் 5:1:3 ஆம் பந்தியின் படி நிறுவனத்தின் கூட்டிணைந்த திட்டம் வருடந்தோறும் நாளது வரையாக்கப்பட வேண்டிய போதிலும், தேயிலை சக்தி நிதியத்தின் கூட்டிணைந்த திட்டம் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலாபத்தன்மை இலக்கினை அனுகியிருக்காமை

நிதியத்தின் பங்குதாரர்களின் பொருளாதார நலனை அதிகரிப்பதற்காக வருடாந்தம் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் இலாபத்தினை ரூபா 150 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்வதற்கும் உள்நாட்டு தேயிலைப் பிரிவிலிருந்து கிடைக்கும் தேறிய இலாபத்தினை வருடாந்தம் ரூபா 1 மில்லியனால் அதிகரித்துக் கொள்வதற்கும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலைகளின் இலாபம் ஆண்டுக்காண்டு குறைந்து

வருவதுடன் உள்நாட்டு தேயிலைப் பிரிவு 2006 ஆம் ஆண்டு முதல் நட்டத்தில் இயங்கி வருகின்றது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) தேசிய மட்ட நடைமுறைக் கணக்கு

(ஈ) தொழிற்சாலைகளை செயற்படுத்தல்

(உ) சொத்துக்களைப் பயன்படுத்தல்

(ஊ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

(எ) வாகனப் பாவனை

ஒப்பம் எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.